REGD. No. M. 6311

PHONE No. 55630

தனி இதழ் ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 197

# நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ 24—0—0
6 மாதம் ரூ 12—0—0
3 மாதம் ரூ 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சென்னை: தை 17உ சனி (30—1—54) ★ ★ ★ வெளியூர்: தை 18உ ஞாயிறு (31—1—54)

# கல்லக்குடி வழக்கு—சிலருக்கு $3\frac{1}{2}$ ஆண்டுகள் கடினகாவல் தண்டனை!

(★)

## கண்ணதாசனுக்கு சட்டப்படி கொடுத்த தண்டனை $2\frac{1}{2}$ ஆண்டு அனுபவிக்க வேண்டியது $1\frac{1}{2}$ ஆண்டு சிறை!

★

## தர்மலிங்கத்திற்கும் மற்ற நால்வருக்கும் ஒரு ஆண்டு சிறை வாசம்

### திருச்சி சப்-டிவிஷனல் மாஜிஸ்திரேட் திரு. கே. பி. ராதாகிருஷ்ண மேனன் தாராளம்!

திருச்சி, ஜன. 29—

முதலாவது குற்றவாளி முதல் ஏழாவது குற்றவாளி வரை, கு-9, கு-14, குற்றவாளி 16-லிருந்து 24-வது குற்றவாளி வரை, ஆக 18 தோழர்களை இ. பி. கோ. 147-வது பிரிவின்கீழ் குற்றவாளிகள் எனத் தீர்மானித்து, அந்தப் பிரிவிற்காக ஓராண்டு கடினகாவல் தண்டனை தரப்பட்டிருக்கிறது.

கு-9, கு-14, கு-17, கு-18, கு-22, கு-23, கு-24 ஆகிய தோழர்கள் இ. பி. கோ. 34, 332 பிரிவின்கீழ் குற்றம் புரிந்ததாகக் கூறி ஒரு வருஷ கடினகாவல் தண்டனை தரப்பட்டது.

கு. 1-லிருந்து 7 வரை, கு-10, கு-11, கு-12, கு-14, கு-15, கு-19, கு-20, கு-21, ஆகிய 15 தோழர்கள் இ. பி. கோ. 149, 332 பிரிவுகளின்படியும் குற்றம் செய்திருப்பதாகக் கூறி, அதற்காக ஓராண்டு கடினகாவல் தண்டனை தரப்பட்டுள்ளது.

மேற்குறித்துள்ள தண்டனை காலம் ஒரே காலத்தில் அனுபவிக்கப்பட வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்பட்டு இருக்கிறது.

கு-1 முதல் 7 வரை, கு-9, கு-10, கு-11, கு-14, கு-16 முதல் 21 வரை உள்ள 17 தோழர்கள் இந்திய இரயில்வே சட்டம் 128-வது பிரிவுப்படி குற்றவாளிகள் எனத் தீர்மானித்து, ஒவ்வொருவருக்கும் 6 மாத கடினகாவல் தண்டனை தரப்பட்டு இருக்கிறது.

முன்கூறிய தண்டனை காலம் முடிந்த பிறகு, இந்த 6 மாதத் தண்டனையை அனுபவிக்க வேண்டும் என்று மாஜிஸ்திரேட் தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்.

தோழர்கள் செபாஸ்டின் ராஜு, மருதநாயகம் ஆகிய இருவரும் நிரபராதிகளெனக் கூறி விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

—இவ்வாறு, 29—1—54 மாலை 3 மணிக்கு திருச்சி சப்-டிவிஷனல் மாஜிஸ்திரேட் கே. பி. ராதாகிருஷ்ணமேனன் அவர்களால் கல்லக்குடி வழக்கில் சம்பந்தப்பட்ட தோழர்கள் கண்ணதாசன், அம்பில்-தர்மலிங்கம், ஏ. தம்புசாமி, வடிவேலு, ஏ. ராதாகிருஷ்ணன், ஐ. எம். ஷெரீப், கோபாலகிருஷ்ணன், சதாசிவம், நிமலன், நாராயணன், சந்தானம், ஜோசப், ரத்தினம், செபாஸ்தியன் ராஜு, முனுசாமி, ராமதாஸ், பிச்சை, குசை, துரைராஜு, ரங்கராஜு, யங்காருசாமி, தங்கசீர், மருதநாயகம், கருமலை, சண்முகம் ஆகிய 24 தோழர்கள் மீது நடந்த வழக்கில் தீர்ப்பு கூறப்பட்டது.

### ஒன்றரை ஆண்டு தண்டனை பெற்றவர்கள்:

தோழர்கள் கவிஞர் கண்ணதாசன், வடிவேலு, சண்முகம், தஞ்சீர், துரைராஜ், ரெங்கராஜன், குசை, முனுசாமி, நிமலன், சதாசிவம், நாராயணன், ஐ. எம். ஷரீப், கலைமகன் ராதாகிருஷ்ணன், ராமதாஸ், யங்காருசாமி, கோபாலகிருஷ்ணன், டி. வி. பிச்சை ஆகிய 17 தோழர்களுக்கு இ. பி. கோ. 147, 332 ஆகிய செக்ஷன்படி 1 வருடமும், ரயில்வே ஆக்ட் 128-ன்படி 6 மாதமும் ஆக $1\frac{1}{2}$ ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டனர்.

★

### ஓராண்டு தண்டனை பெற்றவர்கள்:

தோழர்கள் தி. மாவட்டச் செயலாளர் ஏ. பி. தர்மலிங்கம், தம்புசாமி, கருமலை, ரெத்தினம், சந்தானம், ஜோசப் ஆகிய ஐந்து தோழர்களுக்கும் இ. பி. கோ. 332, 34-ன்படி 1 வருடக் கடுங்காவல் தண்டனையும் அளிக்கப்பட்டது.

வழக்கின் முடிவைக் காண 28, 29 ஆகிய இரண்டு நாட்களிலும் ஏராளமான பொது மக்களும், இயக்கத் தோழர்களும் வந்திருந்தனர். மாலை 6-30 மணிக்கு அனைவரையும் லாரியில் ஏற்றியதும் தோழர்கள் அனைவரும் புன்முறுவலுடன் விடைபெற்றனர்.

தோழர்கள் அனைவரையும், தோழர்கள் சி. பி. சிற்றரசு, ஜி பராங்குசம், துறையூர் அழகமுத்து, எம். எஸ். மணி, திராவிடமணி முத்து, எஸ். செமோறன், நா. ராஜன், எஸ். பிரான்சிஸ், முத்துகருப்பன், குளித்தலை ராஜா, வையாபுரிசோழகர், சின்னப்பா, முத்துகிருஷ்ணன், பி. மரியண்ணன், மற்றும் திருச்சி நகர தி. மு. கழகத் தோழர்கள் வழியனுப்பி வைத்தார்கள்.

தோழர்கள் அனைவரும் திருச்சி மத்திய சிறையில் வைக்கப்பட்டுள்ளனர்.

---

# காந்தியார் ஓவியத்தை அலட்சியப்படுத்திய சி. ஆர்.

## காங்கிரஸ் கண்காட்சியினர் போக்கும் அதுவேதான்!

சென்னை, ஜன. 29—

தேசியத் தலைவர்கள் அடங்கிய கலை மண்டபம் ஒன்று புதுப்பேட்டையில் நிறுவப்பட்டிருக்கிறது. அதன் சார்பில் 'ராஜாஜி தினம்' கொண்டாடப்பட்டது. இதற்குத் தலைமை வகித்த ஓவியர் வைத்தியநாதன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"நம் மாநிலத்திலுள்ள காங்கிரஸ்காரர்கள், 1938ல் சண் காட்சி நடத்தினார்கள்; தரையில் விழுந்த இரு அரிஜன் குழந்தைகளை காந்தியார் தூக்கியெடுக்கும் காட்சியை 7 அடி உயரத்திற்கு நான் வரைந்திருந்தேன்; அந்தப் படத்தை, கண்காட்சியில் வைக்கக் காங்கிரஸ்காரர்கள் அனுமதி தரவில்லை; அப்போது முதல் அமைச்சராக இருந்த ராஜாஜி வீட்டிற்கு நானும், சில அரிஜனத் தோழர்களும் அந்தப் படத்தைத் தூக்கிச் சென்றோம்; 'இங்கே இடமில்லை, போ', என அங்கேயும் விரட்டப்பட்டோம். அதன்பிறகு அந்தப் படத்தை காந்தியாருக்கு அனுப்பினேன்; அவர் பாராட்டினார்," என்றார்.

# கல்லூரி மாணவன் ஆற்றலே ஆற்றல்!

மதுரை, ஜன. 29—

மதுரை அமெரிக்கன் கல்லூரியைச் சேர்ந்த ஒரு மாணவர் ஒரே சமயத்தில் 38 இட்லிகளைச் சாப்பிட்டு அதற்காகப் பரிசு பெற்றார். தாமஸ் என்ற அந்தக் கல்லூரி மாணவர், 'கல்லூரி நாள்' கொண்டாட்டத்தின் போது போட்டியில் வெற்றி பெற்றார்.

"38 இட்லிதானே; இது என்ன பிரமாதம்! இதற்கு மேலும் என்னால் சாப்பிட முடியும்,"

—என்று அவர் சொன்னதாகத் தெரிகிறது.

# 136 ஆதிவாசிகள் — கைது செய்யப்பட்டனர்

(:)

## சர்க்கார் புறம்போக்கு நிலத்தைக் கைப்பற்றினதே காரணம்

நாசிக், ஜன. 29—

பம்பாய் மாநிலத்திலுள்ள நாசிக் மாவட்டத்தில் உள்ள 13 கிராமத்தில் வசிக்கும் ஆதிவாசி மக்கள், சர்க்கார் புறம்போக்கு நிலங்களைத் தங்களுக்குப் பயிர் செய்வதற்காகத் தரவேண்டுமென்று, அறப்போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களில் 136 பழங்குடி மக்களை சர்க்கார் கைது செய்துள்ளது.

இந்த அறப்போராட்டத்திற்கு எந்த ஒரு அரசியல் கட்சியின் தூண்டுதலும் கிடையாது என்று சொல்லப்படுவதோடு, ஆதிவாசிகளின் அறப்போராட்டக் குழுவின் முழுப் பொறுப்பிலேயே இப்போராட்டம் நடத்தப்பெறுவதாகவும் சொல்லப்படுகிறது.

அதன் முக்கியத் தலைவர்கள் இதுவரை கைது செய்யப்படவில்லை.

சிறு சிறு கூட்டத்தினராக ஆதிவாசிகள் ஒன்று சேர்ந்து கொண்டு, சர்க்கார் நிலங்களை கைப்பற்ற முனைந்தனர் என்றும், அப்படி முனைந்தவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் சொல்லப்படுகிறது.

# நம் நாடு

தி.மு.க. நாளிதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 30—1—1954 சனி


# கண்ணீர்த் துளிகள் கண்ட வெற்றி!

வளமார் திராவிடத்தில் வளர்ந்துவரும் திராவிட இன எழுச்சியை, "திராவிட நாடு திராவிடருக்கே" என்று முழங்கும் நாட்டுரிமைக் கிளர்ச்சியை, சமூக—அரசியல்—பொருளாதார விடுதலை நாடும், திராவிட மக்களின் ஒன்றுபட்ட சக்தியை இன்று ஆட்சி பீடத்தில் வீற்றிருக்கும் ஆளவந்தார்கள் அடக்குமுறைக் கொடுமைகள் மூலம் ஒழித்துக் கட்டிவிடலாம் என்று திட்டமிட்டிருக்கிறார்கள். ஆனால் இன்று ஆட்சிபீடத்திலிருப்பவர்களோ அன்று, அடக்குமுறை கொடுமையை எதிர்த்தவர்கள்; சட்டங்களை மீறியவர்கள்; சிறைவாசங்களை அனுபவித்தவர்கள்; அந்நியர் ஆதிக்கம் ஒழிய கிளர்ச்சிகள் பல புரிந்தவர்கள்; கோர்ட்டு - கல்லூரி - கள்ளுக்கடை மறியல்கள் மூலம் தேசபக்தர்கள் என்ற நற்பெயரைப் பெற்ற சுதந்திர வீரர்கள்; காந்திய நெறி வழிபயின்ற உத்தமர்கள்—இன்று ஆட்சி பீடத்திலிருக்கிறார்கள்; ஆனால், இவர்கள் ஆட்சியில் ஜனநாயகத்திற்கு மதிப்பில்லாமல் போய்விட்டது.

ஜனநாயகத்தைக் கொலை செய்து, தவறான வழியில் பதவி பெற்றவர்கள் இன்று ஜனநாயகம் போதிக்கிறார்கள்! இந்நாட்டில், மக்களுடைய வறுமை - பஞ்சம் - பசி - வேலையில்லாத் திண்டாட்டம் - கல்வியின்மை ஆகியவைகள் போக்கப்படும் என்று கூறினார்கள்; இங்கு கைத்தொழில் வளர்ச்சிகள், விஞ்ஞான வளர்ச்சி, அடிப்படையின் தொழில் துறைகள் காணப்படும் என்று பறை சாற்றினார்கள். "ஏழை என்றும் அடிமை என்றும் எவனுமில்லை சாதியில்; மனிதன் உணவை மனிதன் பறிக்கும் வழக்கம் இனியுண்டோ? நம்மில் அந்த வழக்கம் இனியுண்டோ? மனிதர் நோக, மனிதர் சாக, மனிதர் பார்க்கும் வழக்கம் இனியுண்டோ? நம்மில் அந்த வழக்கம் இனியுண்டோ?" என்று முழக்கமிட்டு மேடைகளில் விரிவுரையாற்றினார்கள்.

ஆனால் இன்று, மக்கள் படும் துயரம் கண்டும், பட்டினியால்-பசியால்-வறுமையால் மக்கள் செத்துமடிவதைக் கண்டும், ஐந்தாண்டுத் திட்டங்களை ஆதாரமாகக் கூறுகிறார்கள்; ஆண்டவன் அருள் கிடைக்கும் - பக்தி செலுத்துங்கள் என்று வேதாந்தம் பேசுகிறார்கள்.

மக்கள் வரிப் பணத்தில் ஆயிரக்கணக்கான ரூபாயை சம்பளமாக வாங்கிக்கொண்டு வடநாட்டான் ஆதிக்கத்திற்கும், சுரண்டலுக்கும், கொள்ளைக்கும்—வளமார் திராவிடத்தை அடிமைப் படுகுழியில் தள்ளி மீள முடியமல் செய்ய முயற்சிக்கிறார்கள்.

'பாரத மாதா,' 'இந்தியத் தாய்' 'சுதந்திர இந்தியக் குடியரசு' என்ற சொற்களைக் கூறி, மக்கள் நல உணர்ச்சியை நசுக்கிவிடலாம் என்று கருதிக்கொண்டிருக்கிறார்கள்; எதிர்க் கட்சிகள் குழி தோண்டிப் புதைக்கப்பட வேண்டும் என்று துணிந்து கூறுகிறார்கள்.

இந்திய சுதந்திரக் குடியாட்சியில் வகுப்புவாதிகளை ஒழித்துக்கட்டி விடுவோம்; நாட்டுப் பிரிவினைக் கூச்சல்காரர்களை நசுக்கியே தீருவோம் என்றெல்லாம் மந்திரிமார்கள் பேசுகிறார்கள்; மக்கள் வரிப் பணத்தில் சம்பளம் பெற்று, நாட்டில் பவனி வருகிறார்கள்; உல்லாச வாழ்வு நடத்துகிறார்கள் இந்த உத்தம தேச பக்தர்கள்!

இந்தப் புனிதர்களின் எதிர்ப்புக்கு நடுவில் நாம் வளர்ந்துள்ளோம்; அடக்குமுறைக் கொடுமைகளைத் தாங்கிக் கொண்டோம்; சிறைவாசத்தின் இன்னல்களை ஏற்றுக் கொண்டோம்; தடியடி, கண்ணீர்ப்புகை, துப்பாக்கிப் பிரயோகம் ஆகியவற்றுக்குத் தோழர்கள் பலரைப் பலி கொடுத்தோம்; பல தோழர்கள் கை, கால்களை இழந்தனர்; இரத்தம் சிந்தினர்; பலர் மறைந்திருந்து கொலை செய்யப்பட்டனர்—இவ்வித இன்னல்களையெல்லாம் தாங்கி, நாமும் வளர்கிறோம்; நம் தி. மு. கழகமும் வளர்ந்து வருகிறது.

தலைவர்கள் மீதும், தோழர்கள் மீதும், கழகத்தின் மீதும் குற்றங்கள் சாட்டி, நீதிமன்றத்தில் நம்மை நிறுத்தி, சதிக்குற்றங்களைச் சாட்டி நம்மை ஒழித்துவிடலாம் என்று ஆளவந்தார்கள் கருதுகிறார்கள்.

தூத்துக்குடியில் சதி வழக்குகள்; கல்லக்குடியில் நம் தோழர்கள் மீது வழக்குகள்; இவர் மீது உயர் நீதிமன்றத்தில் அப்பீல் வழக்குகள்—ஆகியவற்றினால் நம் கொள்கைகளை, உயர்ந்த நோக்கத்தை எவராலும் அழித்துவிட முடியாது.

கல்லக்குடி வழக்கு முடிவுபெற்றது; நீதிபதி தீர்ப்புக் கூறுவார் என்ற செய்தி கிடைத்தது.

நாம் குற்றவாளிகள் இல்லை; உரிமைக்காகப் போராடுவது குற்றமாயின், சிறை செல்லவும், கடுங்காவல் தண்டனை ஏற்கவும் எப்பொழுதும் தயார்—என்ற உறுதிப்பாட்டுடன், நம் முன்னணி வீரர்கள் மகிழ்ச்சியோடு தீர்ப்பின் முடிவை எதிர்பார்த்து நிற்கிறார்கள்.

திருச்சி கோர்ட்டு நீதிபதியின் தீர்ப்போ முடிந்த முடிவல்ல; உயர் நீதிமன்றத்திலும் நாம் நீதி பெற இடமிருக்கிறது; எங்குமே நீதி கிடைக்காவிட்டால் இறுதி முடிவை நம் அருமைத் தோழர்கள் வரவேற்று, மகிழ்ச்சியுடன் சிறைவாசத்தின் இன்னல்களை ஏற்கப் பின்வாங்கமாட்டார்கள்.

தூத்துக்குடி வழக்கும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது; இந்த வழக்கில் நம் தோழர்கள்மீது பல குற்றங்களைச் சாட்டி, பழிகள் சுமத்தி, நிரபராதிகளையும் சிறைப்படுத்தி வைத்திருக்கிறார்கள். இந்த வழக்கைத் திறம்பட நடத்திச் செல்ல குறைந்தது ரூ 20 000 (இருபதினாயிரம்) தேவை ஏற்படலாம் என்றும், இந்த வழக்கு நிதிக்கு எல்லோரும் தாராளமாக அன்புடன் உதவ வேண்டுமென்றும் கழகப் பொதுச் செயலாளர் கேட்டுக் கொண்டார். பொது மக்கள், கழகத் தோழர்கள், வியாபாரிகள், தொழிலாளர்கள், நடிகர்கள், கல்லூரி மாணவ மாணவிகள், தாய்மார்கள், விவசாயிகள், சிலோன், மலாய் இலாகா உத்தியோகஸ்தர்கள், வெளிநாட்டில் வசிக்கும் தோழர்கள் ஆகியோரிடமிருந்து இதுவரை ரூ 13,650 (பதிமூவாயிரத்தி அறுநூறு ஐம்பது) வரை கிடைத்திருக்கிறது என்ற மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

தூத்துக்குடி வழக்கு நிதிக்கு நிதிவசூலித்துத் தருவதாக ஒப்புக்கொண்ட மாவட்டங்களும், தி. மு. கழகத் தோழர்களும் மீதியுள்ள தொகையையும் சேர்த்துக்கொடுக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம். பொதுமக்களும், கழக அனுதாபிகளும் வழக்கு நிதிக்கு அன்புடன் உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

கண்ணீர்த் துளிகளால் ஒன்றும் செய்ய முடியாது; அவர்களுக்குப் பணமேது? புதுப் புது சினிமாப் படங்களைப் பார்க்கவும், நாடகங்கள் நடிக்கவும், மேடையில் அலங்காரமாகப் பேசும் பொழுதுபோக்குக் கட்சிக்குப் பொதுஜன ஆதரவு உண்டா?—என்றெல்லாம் குத்தல் கொண்டு குதி, ஏளனமாகப் பார்க்கும் கிண்டல்காரர்கட்கும், அடக்குமுறைகள், போலீஸ், இராணுவம் சிறைச்சாலை இவைகளை மட்டும் நம்பி, ஆட்சிபீடத்தில் வீற்றிருக்கும் ஆளவந்தார்கட்கும் நல்ல அரசியல் தெளிவு ஏற்படும்படி நமதருமைத் தோழர்களால் முன்னைப் போராட்டங்களில் வெற்றி கண்டிருக்கிறோம். ஆகவே, 'திராவிட நாடு திராவிடருக்கே' ஏற்படும்வரை ஓயாது உழைப்போம்! இறுதி வெற்றி காணும்வரை உறுதியுடன் உழைப்போம்!! வெற்றி நமதே!!!

# "கவர்னர் பதவி இலகுவானதல்ல!"

—(:)—

## "நம்மைப் போன்றவர் எல்லாம் டில்லியின் முன்னேறும் பிள்ளைகள்" என்கிறார் பிரகாசா

சென்னை, ஜன. 29—

மாநில கவர்னர்கள் பொறுப்பு என்ன? அவர் என்ன செய்யவேண்டும்—என்ன செய்யக்கூடாது என்பது பற்றி எல்லாம் தற்போது பலர் அபிப்பிராயம் தெரிவித்து வருகின்றனர். இதுபற்றிய சர்ச்சைகள் பத்திரிகைகளிலும் வெளியாகிறது. கவர்னரின் நிலைமை மத்திய அரசாங்கத்துக்கும், மாநில சர்க்காருக்கும் இடையே உள்ள தனிப்பட்ட ஒரு அந்தஸ்தையுடையதாயிருக்கிறது. மத்திய சர்க்காரின் பிரதிநிதியாக ஒருபுறமும், மாநில மக்களின் ஊழியராக மற்றோர் புறமும், கவர்னர் பதவி வகிக்கிறார். அவர் மாநிலத்தின் நலனை எச்சமயத்திலும், எதற்காகவும் விட்டுக் கொடுக்க முடியாது; இதிலிருந்து கவர்னரின் உத்தியோகம் சுலபமானதல்ல என்பதை உணரவேண்டும்,"

—என்று, "கூட்டு அரசு இந்தியாவில் கவர்னரின் அந்தஸ்து," என்ற பொருள் பற்றி, சென்னை கவர்னர் பிரகாசா, சென்னை சமூக சேவா பயிற்சிப் பள்ளியில் நீண்ட விரிவுரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

மேலும் அவர் சொன்னார்:—மத்திய அரசாங்கத்தின் பிரதிநிதியாக மாநிலங்களில் கவர்னர் விளங்குகிறார். மத்திய சர்க்கார் காங்கிரஸ் சர்க்காராக இருப்பதாகவும், சென்னையில் சோஷலிஸ்டு சர்க்கார் இருப்பதாகவும், வைத்துக் கொள்வோம்; மத்திய சர்க்காரால் நியமிக்கும் கவர்னர் காங்கிரஸ்காரராக இருப்பார்; சோஷலிஸ்ட் சர்க்காரோடு அவர் அன்றாட நடவடிக்கைகளில் தொடர்பு கொண்டிருக்க வேண்டியவராகிறார்; ஆனால் மத்திய சர்க்காருடன் கவர்னருக்கு நேரடியான தொடர்பு உண்டு. மாநில அரசாங்கத்துக்குத் தெரியாமல் இரகசியமாக மத்திய சர்க்காருடன் கவர்னர் கடிதப் போக்குவரத்து அல்லது பேச்சு வார்த்தை வைத்துக் கொள்ள அவருக்கு உரிமையுண்டு.

பல்வேறு தரப்பினர்களிடையே விட்டுக் கொடுக்கும் சுபாவமும், பொது அறிவும் இல்லையேல் அரசியல் அமைதி ஏற்படாது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு சென்னை சர்க்காரில் இருந்த நிலைமை என்ன? தேர்தலில் அப்போதிருந்த பிரதம மந்திரியும் தோற்கடிக்கப்பட்டார் முறைப்படி: அவர் பதவியை உடனே ராஜினாமா செய்தார். வேறு ஏற்பாடு செய்யும் வரையில் பதவியில் அவர் நீடித்திருக்கும்படி கோரப்பட்டது. அவர் இணங்கியிராவிடில் என்னவாகும்? தேர்தல் முடிந்து சட்டசபை அங்கத்தினர்களிடையே கட்சி நிலைமை அலங்கோலமாயிருந்தது. மந்திரி சபை அமைக்க யாரை அழைப்பது? இவ்விஷயத்தில், முதல் மந்திரி யோசனை கூற மறுத்துவிட்டார் தேர்தலில் தோற்றபின் அவர் யோசனை கூற எப்படி முன்வருவார்? இந்த நிலைமையில் கவர்னர் என்ன செய்வது?

தேர்தலுக்கு முன்பு தனித் தனியாக இருந்த கட்சிகள் திடீரென ஒன்று சேர்ந்து ஒரு தலைவரைத் தேர்ந்தெடுத்துவிட்டால் அவரை அழைத்து விடுவதா? குடிஅரசுச் சட்டத்தின் 356-வது விதியின்படி, சட்டசபையைக் கலைத்துவிட்டு கவர்னர் ஆட்சி ஏற்படுத்தலாம் என்று யோசனை கூறப்பட்டது. ஆனால், கூடியவரையில் ஜனநாயக முறைப்படி ஆட்சி இருக்கவேண்டுமென்றே விரும்பினேன். யோசனை கூற யாரும் இல்லாத போது, சர்க்காரே இல்லாத போது, கவர்னரே தன் அதிகாரத்தை உபயோகப்படுத்த வேண்டியது அவசியமாகிறது. இந்நிலையில் நியமனங்கள் செய்யவேண்டிய பிரச்சினை யெழுந்தது. எனவே, நான் சி. இராஜகோபாலாச்சாரியை நியமித்தேன். அவரை இப்பொழுது பலர் விரும்பாமலிருக்கலாம். இம் மாதிரி சமயங்களில்தான் கவர்னர் தமது இஷ்டபூர்வமான அதிகாரத்தைப் பிரயோகிக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது.

மற்றும் பல சமயங்களில் கவர்னர்களுக்குச் சங்கடமான நிலைமை ஏற்படுகிறது. செனேட் போன்ற சர்வகலாசாலை நிலயங்களுக்குச் சில அங்கத்தினர்களை கவர்னர் நியமிக்க வேண்டியிருக்கிறது. இதில், துணைவேந்தரின் சிபாரிசும், கல்வி மந்திரியின் அபிப்பிராயமும் முரண்படும் பொழுது, கவர்னரின் நிலைமை சங்கடமாயிருக்கிறது. ஏதோ ஒரு முடிவு செய்யவேண்டிய நிர்ப்பந்தமேற்படுகிறது.

அவர் தொடர்ந்து பேசினார்:— அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய இரண்டு நாடுகளினுடைய அரசியல் அமைப்பைத் தழுவியது தான் இந்தியக் குடி அரசுச் சட்டம். இந்நாட்டில் பல்வேறு வகுப்புகள், மொழிகள், வாழ்க்கை முறைகள் இருப்பதால், எல்லா மாநிலங்களையும் சேர்த்த கூட்டு அரசியல் சட்டம் ஏற்படுத்த வேண்டியது அவசியமாயிற்று.

நீதி, நிர்வாகம், சட்டசபை ஆகிய மூன்றும் தனித்தனி அங்கங்களாக, சுய உரிமை உள்ளனவாக இருந்தபோதிலும், இங்கிலாந்தில் சட்டசபையும், நிர்வாகமும் இணைந்து இருக்கிறது; மன்னருக்கு அதிகாரம் ஏதுவுமில்லை; அமெரிக்காவில் ஜனாதிபதிக்கு மகத்தான அதிகாரம் இருக்கிறது.

கவர்னர் அலுவலகத்திற்கான செலவினங்களை அவர் குறிப்பிட்டார்:—

"கவர்னர் அலுவலகத்திற்கு சுமார் 10 லட்சம் ரூபாய்க்கு மேல் செலவாகிறது; இது அதிகம் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன்; ஆனால், இந்த ஆடம்பரத்தைத் தவிர்ப்பதற்கான பரிகாரம் எனக்குத் தெரியவில்லை."

## பயிர்கள் விளைச்சல்

சென்னை சர்க்கார் அறிக்கை

சென்னை, ஜன. 29—

சென்னை மாநிலத்தில் வட ஆற்காடு மாவட்டம், திருநெல்வேலி மாவட்டத்தில் சில பகுதிகள், மலபார் மாவட்டம் தவிர மற்ற எல்லா மாவட்டங்களிலும் பயிர் விளைச்சலின் நிலைமை மகிழ்ச்சி அளிப்பதாக சென்னை அரசாங்க அறிக்கை கூறுகிறது.

செங்கற்பட்டு, தென்னாற்காடு, கோவை, தஞ்சாவூர், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் ஒரு ஏக்கரின் சராசரி விளைச்சல் வழக்கம்போல் இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

திருச்சிராப்பள்ளி, மதுரை மாவட்டங்களில், விளைச்சல் பற்றி தற்போது கூறுவதற்கியலாது.

## கட்டபொம்மன் உருவச் சிலை

புதுக்கோட்டை நகரசபை முடிவு

புதுக்கோட்டை, ஜன. 28—

புதுக்கோட்டையில் ஒரு முக்கியமான இடத்தில் வீர கட்டபொம்மனின் சிலையை நிறுத்துவதென்று புதுக்கோட்டை நகரசபை தீர்மானித்துள்ளது.

## போராட்டம் தொடர்கிறது

பிகானிர், ஜன. 27—

ராஜஸ்தான் அரசாங்கத்தினர் ஜோதமை ஏற்றுமதி கொள்கையை எதிர்த்து, கடந்த சில நாட்களாக கிளர்ச்சி செய்து வரும், ராஜஸ்தான் சட்ட சபை கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினரான தோழர் விபாஸ், கிளர்ச்சியை மேலும் தொடர்ந்து நடத்துவதற்கு முற்பட்டுள்ளார்.

இந்தக் கிளர்ச்சியின் காரணமாக, கடந்த 6 நாட்களாக பொது வேலை நிறுத்தமும் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

## சென்னை மேல்சபை துணைத் தேர்தல்

### தேர்தல் கமிஷன் உத்தரவு

புதுடில்லி, ஜன 28—

சென்னை மேல்சபையிலிருந்து தோழர் ஆதித்தன் விலகியதால் ஏற்பட்ட காலி ஸ்தானத்திற்கு சென்னை அசெம்பிளி உறுப்பினர்கள் மார்ச் 4-ந் தேதிக்குள் ஒரு பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று தேர்தல் கமிஷன் உத்தரவிட்டிருக்கிறது.

நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்ய கடைசித் தேதி பிப்ரவரி 11 வாபஸ்பெற கடைசி நாள் பிப்ரவரி 15. தேர்தல் நாள் பிப்ரவரி 27.

## வேலைக்காகப் பதிவு செய்துகொள்ளும் எண்ணிக்கை

### சென்ற ஆண்டு குறைந்துவிட்டது

புதுடெல்லி, ஜன. 59—

நாடெங்கிலும் வேலை தேடி, தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்பவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்துவிட்டது.

சென்ற ஆண்டு 14,08,800 பேர் பதிவு செய்துகொண்டுள்ளனர். (1952ல் 14,76,699 பேர்)

வேலையின் தரத்திற்கு ஏற்ற யோக்கியதாம்சம் உள்ளவர்கள் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறதென்றும், இதன் காரணமாக 71,260 வேலைகளுக்கு ஆட்கள் பூர்த்தி செய்யப்படவே இல்லை என்றும் ஒரு அதிகாரி கூறினார்.

டிராப்டஸ்மன், ஓவர்சியர்கள், உபாத்தியாயர்கள், இஞ்சினியர்கள், நர்சுகள், டாக்டர்கள் ஆகியவர்கள் ஏராளமாகத் தேவைப்படுகின்றனர்.

## கென்யா கலவரம்

### 27 இந்தியர்கள் பலியாயினர்

★

டர்பன், ஜன. 29—

சென்ற இரண்டு ஆண்டுகளில் கென்யா கலவரங்களில் 27 இந்தியர்கள் மாண்டிருக்கின்றனர் என்றும், ஐம்பதாயிரம் பவுன் இந்தியர் சொத்துக்கள் களவாடப்பட்டுள்ளனவென்றும் கென்யாவிலுள்ள இந்திய ஹைகமிஷனர் அறிவித்திருக்கிறார்.

இந்தியர்கள் பலாத்காரத்தை வெறுப்பவர்கள் என்பதை இதரர்கள் அறியவேண்டுமென்று அவர் ஆப்பிரிக்க சுதேசி சஞ்சிகையொன்றில் எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார்.

## முன்னாள் மொராக்கோ சுல்தான்

### பிரெஞ்சு ஆப்பிரிக்காவுக்கு வந்துவிட்டார்

பாரிஸ், ஜன. 29—

மொராக்கோ முன்னாள் சுல்தான் தன் மூன்று மனைவிகளுடனும், 7 ஆசைநாயகிகளுடனும் பிரெஞ்சு பூமத்ய ஆப்பிரிக்காவிலுள்ள பிராஸாவில்லிக்கு வந்து சேர்ந்திருக்கிறார். இவர் இங்கேயேதான் இனி தங்கி வசிக்க வேண்டும்.

## நெல் பயிர்களுக்கு பூச்சிகளால் அழிவு

### நிலவரி தள்ளுபடி குறித்து சென்னை விவசாய மந்திரி

சென்னை, ஜன. 29—

"சென்னை மாநிலத்தில் அநேகமாக எல்லா மாவட்டங்களிலும் பயிர்கள் பூச்சி அரிப்பின் காரணமாக பாதிக்கப்பட்டிருக்கிறது," என்று சென்னை விவசாய மந்திரி அறிவித்துள்ளார். மேலும் அவர் குறிப்பிட்டார்:—

"செங்கற்பட்டு மாவட்டத்தில் மதுராந்தகம், காஞ்சீபுரம் செங்கற்பட்டு தாலுக்காக்களில் பூச்சிகள் காரணமாகப் பயிர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது.

செங்கற்பட்டு மாவட்டத்தில் ஒரு லட்சத்து இருபத்தையாயிரம் ஏக்கரில் சுமார் ஐம்பதினாயிரம் ஏக்கரிலுள்ள பயிர்கள் பூச்சிகளால் பாதிக்கப்பட்டிருக்கிறது. பூச்சிகளை அழித்து, பயிர்களைப் பாதுகாப்பதற்காக விவசாய இலாக்கா காலதாமதமின்றி குறைந்த விலையில் மருந்துகளைக் கொடுத்து உதவியது; சில இடங்களில் பலன் கிடைத்திருக்கிறது.

தற்போதுள்ள நிலவரி தள்ளுபடி விதிகளின்படி பாதிக்கப்பட்ட இடங்களுக்கு குறிப்பிட்ட அளவு நிலவரி தள்ளுபடி கொடுப்பது சாத்தியமில்லை; தள்ளுபடி விதிகளை மாற்றியாவது நிவாரணமளிக்க வேண்டியது அவசியம். நிலவரி தள்ளுபடி சம்பந்தமாக விவசாய இலாகா ஒன்றும் செய்வதற்கில்லை. அதை ரெவினியூ இலாகாதான் கவனிக்க வேண்டும்."

## சென்னை - ஆந்திரா எல்லைப் பிரச்சினை

### எல்லை மாநாடு கூடுகிறது

சென்னை, ஜன. 28—

சென்னை - ஆந்திரா சர்க்கார் எல்லை நிர்ணய சம்பந்தமான பிரச்சினைகளைப் பற்றி விவாதிப்பதற்காக பிப்ரவரி 2-ந் தேதி ஒரு மகாநாட்டை முதல் மந்திரி சி. இராஜகோபாலாச்சாரியார் கூட்டியிருக்கிறார் என்று தெரிகிறது.

இந்தப் பிரச்சினையில் சம்பந்தப்பட்டுள்ள அல்லது அக்கறையுள்ள மந்திரிகள், சட்டசபை அங்கத்தினர்கள் அழைக்கப்படுவார்களென்று கூறப்படுகிறது.

## சிங்கப்பூருக்குக் கப்பல் தபால்

சென்னை, ஜன. 29—

'எஸ். எஸ். ரஜூலா' கப்பல் பிப்ரவரி 5-தேதி சென்னையிலிருந்து சிங்கப்பூருக்குப் புறப்படுகிறது. நகரக் கிளைத் தபாலாபீசுகளில் பிப்ரவரி 4-தேதி காலை 10 மணிக்கு முன்பும், ஜி. பி. ஓ. நிலையத்தில் அன்று மாலை 4 மணிக்கு முன்பும் போடப்படும் தபால்கள் இந்தக் கப்பலில் சேரும்.

## நாடாண்ட ராணி நடிகரின் மனைவியாவார்

கெய்ரோ, ஜன. 28—

எகிப்தின் முன்னாள் அரசி நாரிமன், எகிப்திய சினிமா நடிகர் பரீத் எல் அட்ராஷை மணந்துகொள்ள உத்தேசித்திருக்கிறாராம். அட்ராஷ் ஓர் பணக்கார ராஜ குடும்பத்தைச் சேர்ந்தவர்.

அத்தகவலை அட்ராஷ் ஊர்ஜிதம் செய்திருக்கிறார். திருமணத்திற்காக அவர் ஏற்பாடு செய்து வருகிறாராம்.

### சுல்தானைக் கடத்திவர 50 கோடி பிராங்க்?

முன்னாள் சுல்தானை கடத்திக்கொண்டு வந்துவிட ஆட்டோஸ்கோர்ஸெனி 50 கோடி பிராங்க் கேட்டதாகத் தெரிய வருகிறது. இவர் முஸோலினியைக் கடத்தி வந்தவர். —ரேபுள்.

# தூத்துக்குடி சதி வழக்கு நிதி வசூல்

| | |
|---|---|
| முன் (29—1—54) தொடர்ச்சி ரூ | 12,341—10—10 |
| சென்னை இராயப்பேட்டை | |
| „ இரா. நமச்சிவாயம் | 1—0—0 |
| „ ச. ராமமூர்த்தி | 1—0—0 |
| „ பி மொகமத் | 1—0—0 |
| „ தி. பி தனராசன் | 1—0—0 |
| „ என். எம். கிருஷ்ணன் | 1—0—0 |
| „ கே. சாமு | 1—0—0 |
| சென்னை 29-வது வட்டம் நேப்பியர் பார்க் கிளைக் கழகத் தோழர்கள் செல்லை வேணுகோபால், சொ. தேவராசன், அ. க. சி. பாபு, கரிகாலன், மோகன் முனுசாமி, ப. க. வேணுகோபால், கனகவல்லி சங்கர், தமிழ்ப்பித்தன், அ. ச. வேலன், அ பொ. அரசு ஆகியோர் 10 நாட்களுக்குக் காலை உணவை நிறுத்தி | 25—0—0 |
| தோழர் எம். ஜி. ராமச்சந்திரன் அவர்கள் மூலம்:— | |
| ஒத்தக்குடி தி. மு. கழகம் | 1—10—3 |
| ஓடைப்பட்டி „ | 2—0—0 |
| சின்னமனூர். முத்துதேவன்பட்டி தி. மு. கழகங்கள் | 1—6—0 |
| கைபொப்பம் வாங்கிய அன்பர்கள் மூலம் | 3—13—0 |
| கொல்லைக்கோம்பை அடைக்கன் | 3—8—0 |
| பெங்களூர் ஏ. எஸ். வாசன் அண்டு பிரதர்ஸ் | 5—4—0 |
| வல்லவராயன்பட்டி முத்துவெள்ளை, ராமர், ராசமாணிக்கம், கரிகாலன், வெள்ளையன், கார்மேகம், மூக்கையா, செல்லமுத்து, குமரன், பெருமான், நடராசன், அழகிரி, பொன்ராசு, விஜயராம், ராமர், அழகர், சாமி, மகதையன், விளாங்காபோக்கம் வி. டி. கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் | 5—8—0 |
| சென்னை 13-வது வட்டம் மண்ணடி தி. மு. கழகத் தோழர்கள் | |
| மா. வேணுகோபாலன் | 1—0—0 |
| மு. மாணிக்கம் | 1—0—0 |
| மா. வெங்கடேசன் | 1—0—0 |
| மா. வெற்றிச்செல்வன் | 1—0—0 |
| டி. என். ராசன் | 1—0—0 |
| கே. நடராசன் | 1—0—0 |
| ஆர் கோவிந்தராசுலு | 1—0—0 |
| அப்துல்லா | 1—0—0 |
| மணி | 1—0—0 |
| சி. ர. பாண்டியன் | 1—0—0 |
| பி. டி. மூர்த்தி | 1—0—0 |
| அ. கு. பெருமாள் | 1—0—0 |
| என். கணேசன் | 1—0—0 |
| எம். ஏகாம்பரம் | 1—0—0 |
| எம். கே. சாமி | 1—0—0 |
| அகிலன் | 1—0—0 |
| என் ராமமூர்த்தி | 1—0—0 |
| அ. சிவானந்தம் | 1—0—0 |
| பழம் நீ | 1—0—0 |
| மு. வரதராசன் | |
| சு கோவிந்தசாமி, அனாராஜ், நடேசன், அப்பாதுரை, ரங்கநாதன், பாலகிருஷ்ணன் ஆகியோர் | 8—0—0 |
| கே. கிருஷ்ணன் | 1—0—0 |
| காஞ்சில் சேவியர் | 1—0—0 |
| சென்னை — பெரம்பூர் தென்பகுதி ரயில்வே லோகோ ஒர்க்ஸ் தொழிலாளர்கள் மூலம் வசூல் | 18—12—0 |
| தோழர் ஈ. வெ. கி சம்பத் அவர்கள் மூலம் வசூல்:— | |
| திருச்சி தேவர்மன்றத்தில் 14-1-54ந் தேதி நடத்தப்பட்ட 'பரப்பிரம்மம்' நாடகத்தில், பிரகசர் தி. மு. கழகத்தினை கொடுத்தது | 101—0—0 |
| மாயவரத்தில் 16—1—54-ல் நடந்த பொதுக்கூட்ட உண்டி வசூல் | 20—1—6 |
| கரூர் சோமசுந்தரம், மாயவரம் ஆர். பழனிச்சாமி, விளநகர் கணேசன் ஆகியோர் மூலம் | 15—0—0 |
| சென்னை சவுக்கார் பேட்டையில் நடைபெற்ற மதுரமுத்து — சவுந்திர கோமலம் திருமணத்தின்போது, நன்கொடை— திரு. அ. பொன்னம்பலனார் அவர்கள் மூலம் | 25—0—0 |
| ராசிபுரம் என் பி. சண்முகம் | 1—0—0 |
| „ ஜி. கணபதி | 1—0—0 |
| „ என். சங்கரன் | 1—0—0 |
| „ வி. பி. எஸ். வேணி அம்மாள் | 1—0—0 |
| „ எம். எஸ். வள்ளிமுத்து | 1—0—0 |
| „ என். மாணிக்கம் | 1—0—0 |
| „ சேகர், ராஜா, திரவிய நாடார், முத்தையா, பார்வதி, சாமி, கணபதி, சந்திரன், நெடுஞ்செழியன், பெருமாள், சங்கரன், தேவசகாயம் ஆகியோர் | 4—8—0 |
| தோழர் ஏ. கோவிந்தசாமி எம் எல்.ஏ., அவர்கள் மூலம்:— | |
| செங்கற்பட்டு தி. மு. கழக பொதுக்கூட்ட உண்டி வசூல் | 19—0—0 |
| ஒக்கார் பேட்டை தி. மு. கழகம் | 2—0—0 |
| மாணவர் தோழர் | 9—0—0 |
| அண்ணாமலை நகர் தி. மு. கழகத் தோழர்கள்:— | |
| என். கோவிந்தன் | 1—0—0 |
| எம். ஆர். கோவிந்தசாமி | 1—0—0 |
| ராமகிருஷ்ணன் | 1—0—0 |
| டி. கண்ணன் | 1—0—0 |
| வி. ராமமூர்த்தி | 1—0—0 |
| எஸ். பழனி | 1—0—0 |
| வைத்தியநாதன், சின்னையன், கோவிந்தன், வெங்கடாசலம், ராமசாமி, கிட்டு, ராசு, பக்கிரிசாமி, சிங்காரவேலு ஆகியோர் | 4—0—0 |
| சிதம்பரம் மில்லைத் தொழிலாளர்கள்:— பி. சண்முகம் மூலம் | 4—11—3 |
| அண்ணாமலைப் பல்கலைக் கழக ஊழியர்கள் சங்கம் | 5—0—0 |
| அண்ணாமலைப் பல்கலைக் கழக திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத் தோழர்கள், (முன் அனுப்பிப் பிரசுரமாகிவிட்ட 75 ரூபாய் நீங்கலாக) அண்ணா அவர்களிடம் அளித்தப் பணமுடிப்பு | 530—0—0 |
| மேற்படி அண்ணாமலைப் பல்கலைக் கழக நிகழ்ச்சியில் உண்டி வசூல் | 38—0—1 |
| கடலூர் தி மு கழகப் பொங்கல் விழா நிகழ்ச்சிகளில் உண்டி வசூல் | 9—8—3 |
| தலைவர்களிடம் கைபொப்பம் வாங்கிய அன்பர்கள் மூலம் | 8—8—0 |
| மேற்படி நிகழ்ச்சியில் பார்த்தசாரதி என்பவர் மாதவேடம் புனைந்து வசூலித்த உண்டியல் வசூல் | 2—0—6 |
| திருப்பெரும்பாக்கம் எம். ஏ. சண்முகம் | 5—0—0 |
| கடலூர் தி. மு கழகப் பொங்கல் விழா நிகழ்ச்சியில் கொடுத்த நன்கொடை | 350—0—0 |
| சென்னை, சேத்துப்பட்டு 12—1—54-ல் நடந்த பொதுக்கூட்டத்தில், சாரங்லாரி சர்வீஸ் உரிமையாளர் தோழர் கி. வி. மேத்யூஸ் | 25—0—0 |
| கள்ளக்குறிச்சி வை. துரை | 1—8—0 |
| „ எஸ். சங்கர் | 1—0—0 |
| „ அனுதாபி ஒருவர் | 1—0—0 |
| „ ரா. கல்லப்பன் | 1—0—0 |
| „ கா. சடையப் பிள்ளை | 1—0—0 |
| „ லியாகத் அலிகான் | 1—0—0 |
| „ பாண்டியன் | 1—0—0 |
| „ குட்டையன், ஆறுமுகம், கந்தன், கண்ணன், லட்சுமணன், முருகேசன், நாதன், ராமனுஜன், பத்மனுபன், முத்தையாது, மக்பூன், கோவிந்தசாமி, வெங்கடாசலபதி, கரீம், அமானுல்லா, ஷம்சுதீன், அருணாசலம், கிருஷ்ணமூர்த்தி, திராவிடமணி ஆகியோர் | 7—8—0 |
| வேப்பலோடை அ. கு. அ. திருமலையப்பன் | 2—0—0 |
| வானவாடி தி. மு கழகம் | 3—2—0 |
| ஆகமொத்தம் ரூ. | 13,648—15—8 |

## அரக்கோணம் ரயில் நிறுத்த வழக்கு விசாரணை

அரக்கோணம், ஜன. 27—

தோழர் ஏ. எஸ். சி. கிருட்ணசாமி உட்பட 23 பேர் மீது தொடரப்பட்டிருந்த வழக்கு இன்று அரக்கோணம் சப் - மாஜிஸ்திரேட் கோர்ட்டில் விசாரணைக்கு வந்தது.

ரயில்வே சப்-இன்ஸ்பெக்டரும், கார்டும் சாட்சியமளித்தார்கள். சாட்சிகளை தோழர் ஏ. எஸ். சி. கிருட்ணசாமி குறுக்கு விசாரணை செய்தார்.

வழக்கு 10-2-54க்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது; அன்று தீர்ப்பு கிடைத்துவிடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

## குறள் மன்றம் திறப்பு விழா

14-1-54ல், தஞ்சை-கரந்தை சுண்ணாம்புக்காரத் தெருவில், தோழர் என். ராமநாதன் தலைமையில், தோழர் டி. கே. கோவிந்தராசன் மன்றத்தைத் திறந்து வைத்தார். தோழர்கள் தங்கப்பெருமாள், சுப்பன்னு, ராமசந்திரன், செங்கமலம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

24—1—54ல், குறள் மன்றத்தின் கூட்டம் நடைபெற்றது. தோழர் டி. ரெங்கராஜு அவர்களால் சென்ற கூட்ட அறிக்கையும், வரவு—செலவு கணக்கும் வாசிக்கப்பட்டது. அதுபோது தலைவராக என். கே. தங்கப்பெருமாளும், செயலாளராக ரெங்கராஜுவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## இளைஞர்பகுத்தறிவு முன்னேற்றக் கழக ஆண்டுவிழா

24—1—54-ல், தோழர் சாமி. பழனியப்பன் தலைமையில், விழா நடைபெற்றது. தோழர்கள் தமரைச் செல்வன், அங்கப்பன், முத்துக்கலிங்கன் பேசினர்.

"தமிழை உடனடியாக ஆட்சி மொழியாக்க வேண்டுமென்று சென்னை சர்க்காரை இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது," என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# இரும்படிக்கிற இடத்தில் ஈ, எறும்புக்கென்ன வேலை?

—( : )—

## கல்வி திட்டக் கடையைத் திறந்த கௌரவ சம்பளக்காரர் கண்ட காட்சி

## கிராமப் பஞ்சாயத்தினர் மாநாட்டில் கல்வி ஆலோசகரின் சதி செல்லவில்லை

சென்னை, ஜன. 29—

சென்னை மாநில பஞ்சாயத்து மாநாட்டின் கூட்டம் இன்று டாக்டர் சுப்பராயன் தலைமையில் நடைபெற்றது.

அதுபோது, தோழர் ஸி. ராமச்சந்திரன் 'ஆரம்பக் கல்வித் திட்டம்' என்பதுபற்றிப் பேசினார்.

கூட்டத்தில் ஒருவர் எழுந்து, 'இதுபற்றிப் பேச நாங்கள் அனுமதிக்கமாட்டோம்," என்றார்.

அவரைத் தொடர்ந்து ஏராள மானவர்கள் எதிர்ப்பைத் தெரிவித்தனர். நிகழ்ச்சி நிரலில் இல்லாதவற்றை சேர்க்கக்கூடாதென எதிர்ப்பாளர் தரப்பில் கூறப்பட்டது.

உடனே தலைவர் எழுந்து, சபையின் கருத்தை கைதூக்கி தெரிவிக்கக் கூறினார்.

எதிர்ப்பாளர்களின் வாக்கு அபரிமிதமாக இருந்தது.

தலைவர், தோழர் ராமச்சந்திரனை பேச்சை நிறுத்தும்படி கேட்டுக்கொண்டார்.

காங்கிரசார் சிலர் 'பேசட்டும், பேசட்டும்,' எனக் கூவினர். மீண்டும் கூட்டத்தில் குழப்பம் ஏற்பட்டது.

"ராமச்சந்திரன் பேசக்கூடாது; இது புதிய கல்வித் திட்ட ஆதரவுக் கூட்டமல்ல; பஞ்சாயத்து மாநாடு. இனி ராமச்சந்திரன் பேசினால் நாங்கள் அனைவரும் வெளியேறுவோம்," என எதிர்ப்பாளர்கள் குரலெழுப்பினர்.

தகராறு வளரவே எதிர்ப்பாளர் முகாமைச் சேர்ந்தவர்கள் மண்டபத்தைவிட்டு வெளியேறினர். அவர்கள் அனைவரும் மாநாட்டை பகிஷ்கரிப்பதாக கூறி வெளியேறினர்கள். மாநாடு ஒரு மணி நேரம் ஒத்திவைக்கப்பட்டு மீண்டும் மாலை 6 மணிக்கு கூடிற்று.

அதுபோது, தோழர் ராமச்சந்திரன் சார்பில், தலைவரிடம் ஒரு கடிதம் கொடுக்கப்பட்டது. அக்கடிதத்தில், தனது கௌரவம் பாதிக்கப்பட்டு விட்டதாக அவர் குறிப்பிட்டிருந்தார்.

## கைத்தறி தொழில் அபிவிருத்தி

### மேலும் மத்திய சர்க்கார் உதவி

புதுடில்லி, ஜன. 30—

கைத்தறித் தொழில் அபிவிருத்திக்காக மத்திய சர்க்கார் மேற்கொண்டும் ஆந்திரா (ரு 2,04,362), ஐதராபாத் (ரு 5,100) மத்திய பாரத் (ரு 2,15,665), திரிபுரா (ரு 78,885) அஜ்மீர் (ரு 34,350) பஞ்சாப் (ரு 13,081) ஆகிய மாநிலங்களுக்கு மானியங்களாகவும் பண உதவியளித்திருக்கிறார்கள். ஆந்திராவுக்கு வழங்கப்பட்டுள்ள 2,04,368 ரூபாய் மானியத்தில் ரு 1,63,922 கூட்டுறவுச் சங்கங்களைப் பெருக்குவதற்கும், ரு 15,087 விளம்பர விற்பனை மோட்டாருக்கும், ரு 25,359 சீனியர் இன்ஸ்பெக்டர்களை நியமிப்பதற்கும் உபயோகிக்கப்படும். இந்த மானியங்கள் ஏற்கனவே அந்த மாநிலத்திற்கு வழங்கப்பட்டுள்ள ரு 20,57,838 மானியத்திலிருந்து இத்தகைய பாகிகளுக்கு அந்த மாநில சர்க்கார் ஒதுக்கப்படுகிற தொகைகள் நீங்கலாக உள்ளவையாகும்.

இந்த மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ள தொகைகள் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், சாயம் போடும் நிலையங்களுக்கும், மூலதனக் கடன் அளிப்பதற்கும், விற்பனை நிலையங்களை ஏற்படுத்தவும், விளம்பர பிரசார வேலைக்கும் மேற்பார்வை வேலைகளுக்கும், நெசவாளர்களுக்குக் கடன்கள் வழங்குவதற்கும் உபயோகிக்கப்படும்.

இதுவரை 1953—54-க்கு மொத்தம் 2,61,69,084 ரூபாயுள்ள தொகையை மத்திய சர்க்கார் கொடுத்தும், மானியமாகவும் வழங்கியுள்ளார்கள். அதில் 1,37,24,984 ரூபாய் மானியம்; 1,24,45,100 ரூபாய் கடன்.

## தூத்துக்குடி சதி வழக்கு விசாரணை

### பிப். 1-ந் தேதிக்கு ஒத்திவைப்பு

தூத்துக்குடி, ஜன. 28—

தூத்துக்குடி சதிவழக்கை விசாரணை செய்து வரும் விசேட இணை முதல் வகுப்பு நீதிபதி அரிகரஐயர், இன்று தூத்துக்குடியின் நீதி மன்றத்தை கூட்டவில்லை.

போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் பகதத் கானின் உடல் நிலை இன்னும் 10 நாட்கள் வரை நீதி மன்றத்தில் சாட்சியமளிக்க அனுமதிக்காது என்று மருத்துவர் நற்சான்று அளித்திருப்பதை யொட்டி விசாரணையை பிப். முதல் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

## ரங்கூனுக்கு அருகில் பயங்கர தீ விபத்து

### வீடுகளை விட்டு மக்கள் வெளியேறினர்

ரங்கூன், ஜன 23—

ரங்கூனுக்கு வடக்கே 100-வது மைலிலுள்ள 'ஹெங்சாடா' நகரின் மத்தியில் ஏற்பட்ட பெரும் தீ விபத்தினால் நகரின் கடைத் தெரு ஆஸ்பத்திரி, தபால் தந்தி நிலையம் எல்லாம் நிர்மூலமாகிவிடது என்று செய்திகள் கூறுகின்றன. ஏராளமான மக்கள் அந்த இடத்திலிருந்து நதிக்கரையில் தங்கியிருப்பதாக அறியப்படுகிறது. மேலும் கூறியது விபத்தின் காரணம் தெரியவில்லையாம்.

## துருக்கி—பாகிஸ்தான் இராணுவ ஒப்பந்தமா?

### இல்லையென்கிறார் பாக் பிரதமர்

டாக்கா, ஜன. 29—

துருக்கி பாகிஸ்தானிடையே ஒரு அரசியல் இராணுவ ஒப்பந்தம் சம்பந்தமான பேச்சு வார்த்தைகள் பற்றி அவ்வப்பொழுது பிரிட்டிஷ் சர்க்காருடன் தொடர்பு வைத்துக் கொண்டுள்ளது என்று வெளியாகியுள்ள செய்தியைப் பற்றி பிரதமர் முகமது அலி கூறியதாவது:

"துருக்கி — பாகிஸ்தானுக்கு இடையே இராணுவ ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொள்ளும் பேச்சே கிடையாது; ஆனால், அரசியல் கலாச்சார ஒப்பந்தம் ஏற்பட்டால் அதை வரவேற்க தயாராக இருக்கிறோம்."

## பொதுச் செயலாளர் அண்ணாதுரை

### மாயவரம் வருகை

★

31-1-54 காலை 9-30 மணிக்கு நடராசன் நினைவு வாசகசாலையின் முதலாவது ஆண்டு விழாவும் மாலை நகரப் பூங்காவில், தோழர் ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ., தலைமையில், தோழர்கள் அண்ணாதுரை, கே. ஆர். சம்பந்தம், பி. எ., எம்.எல்.ஏ., ஆர். பாலகுருசாமி ஆகியோர் பேசும் பொதுக்கூட்டமும் நடைபெறும். அவ்வமயம் நடராசன் நினைவு வாசகசாலை சார்பில் வசூலித்த தூத்துக்குடி நிதிக்கு ரூ. 501 கொடுக்கப்படும்.

## திருவண்ணாமலை

### தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

★

31—1—54 ஞாயிறு மாலை 6-30 மணிக்கு, சன்னதித் தெரு கடைசியில், தோழர் வேலு தலைமையில், தோழர்கள் ப. உ. சண்முகம், சிற்றரசு—சுப்ரமணியம், அரசு கவில் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

## பொன்மலை — மேலக் கற்கண்டார் கோட்டை

### தி. மு. கழக உறுப்பினர்களுக்கு

✯

"31—1—54 தேதி ஞாயிறு காலை 10-30 மணிக்கு, கழகக் கட்டிடத்தில், 1954-ம் வருடத்திற்கு இடைக்கால நிர்வாகிகள் தேர்தல் நடைபெறும். எல்லா உறுப்பினர்களும் தவறாது வருமாறு கேட்டுக்கொள்கிறேன்" என்று தோழர் டி. ஆர். கோவிந்தராஜன் அறிவிக்கிறார்.

## திருப்பூர் தி. மா. மு. கழகத் தோழர்களுக்கு

"31—1—54 மாலை 4 மணிக்கு கழகக் கட்டிடத்தில், தோழர் சுப்பிரமணியம் தலைமையில் ஒரு கூட்டம் நடைபெறும். பல பிரச்னைகள் பற்றி ஆலோசிக்கவும், பேசவும் வேண்டியிருப்பதால், கழகத் தோழர்கள் இதனையே அழைப்பாக ஏற்றுக்கொண்டு, வருகை தருமாறு கோருகிறேன்," என்று தோழர் அ. மதியழகன் அறிவிக்கிறார்.

## பொங்கல் விழா

31—1—54 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு ஆரணி கழகச் சார்பில், ஆரணி திருவள்ளுவர் திடலில், தோழர் மா. சு. சம்பந்தம் தலைமையில், தோழர்கள் பா. க. மணி, வி. எ. கோவிந்தராசன், கா. மு. உமார், முகவை ஆர். எஸ். பாண்டியன் ஆகியோர் பேசுவர். இரவு 8-30 மணிக்கு இன்னிசை நிகழ்ச்சி நடைபெறும்.

## நன்றி

எனக்குப் பொங்கல் வாழ்த்துக்கள் அனுப்பி, தங்கள் அன்பைத் தெரிவித்துக்கொண்ட தோழர்கள் எல்லோருக்கும் எனது பணிவன்பான நன்றியை இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

எ. கோவிந்தசாமி, எம். எல். ஏ.,

# 'காந்திக்கு ஜே' சொல்லாத மக்களைக் கண்ட சிவசண்முகத்திற்கு குழப்பம்!

## அவருக்குக் கோவில் கட்டி கும்பிடக் கோருகிறார்

திருச்சி, ஜன. 29—

இங்குள்ள பரங்கிசேலு பிள்ளை சத்தவனத்தில், காந்தியார் சிலையைத் திறந்து வைத்தபோது சென்னை சட்டசபைத் தலைவர் சிவசண்முகம் கூறியதாவது:—

'காந்தி சிலைகளை வீடுகளிலும், பூஜை அறைகளிலும், கோவில் சந்நிதானங்களிலும் வைத்துப் பூஜிக்கவேண்டும். அப்போது தான் மக்களுக்கு காந்தியின் நினைவு வரும்.

"முன்பெல்லாம், மகாத்மா காந்திக்கு ஜே' என்றால், மக்கள் சந்தோஷத்துடன் பதிலுக்கு 'ஜே' போடுவார்கள் இப்போது மக்கள் 'ஜே' போடுவதில்லை. அந்த அளவுக்கு நாட்டின் நிலை மோசமாகிவிட்டது. காந்தியின் சிலைகளுக்கு இரவில் தீபாலங்காரம் காட்ட வேண்டும்," என்றார்.

## நெற்பயிர்களுக்கு சேதம் விளைவிக்கும் பூச்சிகள்

### உதவி கோரப்படுகிறது!

சென்னை, ஜன. 29—

சென்னை மாநிலத்தில் சமீபத்தில் நெற்பயிர் பூச்சிகளால் பாதிக்கப்பட்டதில் "ஸ்டெம் போரர்" என்ற பூச்சியினால் தான் நெற் தண்டுகள் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது.

சென்னை விவசாய இலாகா தக்க நடவடிக்கை எடுத்திருந்தும் பூரண பலன் ஏற்படவில்லையாதலால் இப்பொழுது ஆராய்ச்சியும் நடந்து வருகிறது. இதுபற்றி ஆராய்ச்சி மூலம் ஏதாவது தடுப்பு நடவடிக்கை கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதா என்று இந்திய விவசாய ஆராய்ச்சி கழகத்தை சென்னை சர்க்கார் விவசாய இலாகா கேட்டிருக்கிறது. இந்தக் கழகம் அயல் நாடுகளுக்கு எழுதி இதுபற்றி விவரம் அறியுமென்று தெரிகிறது.

நெல் கதிர்களைப் பாதிக்கும் பூச்சிகளைத் தடுப்பதற்கு ஜப்பானிலுள்ள வழக்கம்போல் தமிழ் மாவட்டங்களிலும், சில இடங்களில் விளக்குகள் வைத்து அதன் மூலம் பூச்சிகளை ஒழிக்கும் முறையும் கையாளப்படுவதாகத் தெரிகிறது. ஆனால் ஏராளமான பகுதிகள் பூச்சிகளால் பாதிக்கப்பட்டிருந்தால் இந்த முறையும் பலனற்றதாகி விடுமாம்.

## குடிகளார் பூங்காவில் கஞ்சாச் செடி!

### 'சிவன் சொத்தை' போலீஸ் கைப்பற்றியது!

திருப்பத்தூர், ஜன. 29—

குன்றக்குடி முருகன் கோவிலுக்குச் சொந்தமான மலைக் கோவில் அடிவாரத்தில், ஆதீனத்திற்குச் சொந்தமான காய்கறித் தோட்டத்தில் இரண்டு கஞ்சாச் செடிகள் வளர்க்கப்பட்டிருந்ததை போலீசார் கண்டுபிடித்தனர்.

காரைக்குடி போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் தமது குழுவினருடன் அத்தோட்டத்திற்குள் புகுந்து, அந்தச் செடிகளையும் பிடுங்கிக் கொண்டதுடன், அது சம்பந்தமாக ஆதீனத்தின் சிப்பந்தியான காசிலிங்கம் என்பவரையும் கைது செய்து சென்றனர். வளர்க்கப்பட்டிருந்த கஞ்சா செடிகளின் உயரம் 6 அடி, 5 அடி என்று சொல்லப்படுகிறது.

## நினைவுக்காக......

திருநெல்வேலி, ஜன. 29—

செய்யது பீடி கம்பெனி சொந்தக்காரர் செய்யது ராவுத்தர் அவர்கள் 20—11—53-ல் காலமானதின் நினைவாக செய்யது பீடி கம்பெனி அலுவலகத் தோழர்கள் 'நம் நாடு' வளர்ச்சிக்கு அனுப்பிய ரு 5-ம் வரப்பெற்றோம்—பொறுப்பாளர்.

## மறுமலர்ச்சி நாடக மன்றம்

பொள்ளாச்சி, டிச 28—

22—1—54 பகல் 3 மணியளவில், தி மு கழக ஆதரவாளர் கூட்டம் தோழர் இர. பாண்டியன் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம், மறுமலர்ச்சி நாடக மன்றம் அமைக்கப்பட்டது. தோழர் பி என். இராமானுஜம் செயலாளராகவும், ரா. சின்னச்சாமி துணைச் செயலாளராகவும், பி. மயில்சாமி பொருளாளராகவும், கே. நடராசு, பெரியார் ராமசாமி, இர. பாண்டியன், பி கா. வெங்கிடாசலம், கே. தங்கவேலு, அ. சாந்து, பி ராமசாமி ஆகியோர்கள் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## கோத்தகிரியில் தோழர் நெடுஞ்செழியன்

24—1—54 காலை 11 மணிக்கு கோத்தகிரி, சப்பாய் தி. மு. கழகத்தின் சார்பில், ஓர் பொதுக்கூட்டம் தோழர் ஜே. பெள்ளி தலைமையில் நடைபெற்றது. அதுபோது, தோழர் நெடுஞ்செழியன் அவர்கள், திராவிடநாடு பிரிக்கப்பட வேண்டிய காரணங்களையும்; பிரிந்தால் வாழ முடியாது என்று கூறுபவர்களுக்கு ஆதாரங்களோடு விளக்கியும், ஆச்சாரியார் தி மு. கழகத்தைக் கண்டு பயப்படுகிறாரெனவும், அதற்குக் காரணமாகிய அறப் போராட்டங்களை விளக்கியும் பேசினார். தோழர் முத்துமணி நன்றி கூறினார்.

## வெங்காயம் மிளகாய் ஏற்றுமதிக்குத் தடை நீடிப்பு

புதுடில்லி, ஜன 29—

வெங்காயமும், மிளகாயும் அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு இப்போது அனுமதிப்பதில்லை என்று இந்திய சர்க்கார் தீர்மானித்திருப்பதாக வர்த்தக மந்திரி அலுவலகத்திலிருந்து வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

இன்னும் மேற்கூறிய பொருள்களின் விலைகள் உள்நாட்டில், அதிகமாகவே இருப்பதால்தான் இந்திய சர்க்கார் இந்த நடவடிக்கையை எடுத்துக் கொண்டிருக்கிறது.

## இலங்கை இந்தியர் தூதுக் குழு

### பிப். 7-ல் நேருவைச் சந்திக்கும்

கொழும்பு ஜன. 29—

இலங்கை இந்தியர் பிரச்னையை விவாதிப்பதற்கு பிப். 7-ம் தேதியன்று இரவு தம்மை திருவனந்தபுரத்தில் சந்திக்க ஒரு தூதுகோஷ்டியை அனுப்புமாறு இலங்கை இந்தியர் காங்கிரசுக்கு பண்டித நேரு தகவல் அனுப்பியிருக்கிறார்.

தூதுக் குழுவைப் பொறுக்க இலங்கை இந்தியர் காரியக் கமிட்டி அடுத்த வாரம் கூடும்.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் தோழர் இரா.நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.